**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2023**

**---------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அது சம்பந்தமாக நிர்வகிக்கின்ற தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான “சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்கான நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானத்தை கணக்கிடும்போது, பிடித்துவைக்கும் வரியைக் கழித்து தேறிய பெறுமதியில் காட்டப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 8,703,412 குறைவாக கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அத்துடன், மீளாய்வாண்டில் வட்டி வருமானத்தின் மீது அறவிடப்பட்ட ரூபா 8,703,412 பிடித்துவைக்கும் வரி தொடர்பில் | நிதியத்தின் நிலையான வைப்புகளைப் பொறுத்தமட்டில் தேறிய பெறுமதி வட்டி வருமானமாகக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. அறவிடப்பட்ட ரூபா 8,703,412 பிடித்துவைக்கும் வரி பெறுமானம் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது. | 2017 ஒக்டோபர் 25 திகதிய அமைச்சரவை முடிவு பிரகாரம் மற்றும் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி, பல்பணிகளுக்கு ஏற்றவகையில் கணக்குகள் |

| | | |
|---|---|---|
| கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் கணக்காண்டில் பிடித்துவைக்கும் வரி இலாப/நட்ட கணக்கில் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். | வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டினுள் தேறப்பட்ட 04 நிலையான வைப்புக்கள் மற்றும் நிதிய முகாமைத்துவ கணக்கு தொடர்பாக கிடைத்த ரூபா 7,016,714 வட்டி வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான வருமானமாக வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் நிலையான வைப்புக்கள் மீளப்பெற்றதாக காட்டப்பட்டிருந்தது. | நிதியத்திலுள்ள மிகை நிதி முதலீட்டில் இருந்து வட்டி வருமானம் ஈட்டப்பட்ட போதிலும், அந்த வருவாய் தேசிய பாதுகாப்பு நிதியத்தின் நோக்கங்களின்படி ஒரு முக்கிய செயல்பாடு அல்ல என்பதால், வட்டி வருமானம் முதலீட்டு நடவடிக்கைகளாக சேர்க்கப்பட்டுள்ளது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் பந்தி 8 இன்படி, முக்கிய வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் செயல்பாட்டு நடவடிக்கைகளாக கருதப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வீட்டு நன்கொடை செலுத்துதல். | 11,666,809 | நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பகுதியளவு வீட்டு நன்கொடைத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டு நன்கொடைத் தவணைகளை செலுத்துதலானது, அப்பயனாளிகள் சேர்ந்த முப்படையினர் மற்றும் பொலிசினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, பயனாளிகளுக்கு பணம் செலுத்துவதற்காக நிதியத்தின் மூலம் மீளாய்வாண்டில் முப்படையினர் மற்றும் பொலிசுக்கு விடுவிக்கப்பட்ட தொகையில், ரூபா 11,666,809 ஆன வீட்டு நன்கொடையானது உரிய பயனாளிகளால் பெறப்பட்டதற்கான ஆதாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வழங்கப்பட்ட தவணைப்பணங்களுக்கு ஏற்புடைய உறுதிப்படுத்தல் அறிக்கைகள் இன்னும் கிடைத்த வண்ணம் உள்ளதுடன், குறித்த உறுதிப்படுத்தல் அறிக்கைகள் கிடைத்தவுடன் அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படும். | நிதி ஒழுங்குவிதி 264(1) பிரகாரம் செயலாற்றி ஒவ்வொரு கொடுப்பனவு பொருட்டும் வவுச்சரில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகை கிடைத்தமை பற்றி பற்றுச்சீட்டுமூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறான நிதி ஒழுங்குவிதி 877(1)(இ) | நியதிச்சட்ட நிதியமொன்றின் எதிர்வரும் ஆண்டிற்கான பாதீட்டு ஆவணம், அந்த நிதியத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு, உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன், நடைமுறை ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஆவணம் 34 நாட்கள் தாமதத்துடன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பாதீட்டு ஆவணம் அந்த ஆண்டு செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொது திறைசேரியின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறான நிதி ஒழுங்குவிதி 877(2)(இ) இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டு நெறி 04 இன் பந்தி 6(ஆ). | நிதிக்கூற்றுக்கள் மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் சிங்கள மொழியில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் நிதியாண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் மூன்று மொழிகளில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதி 877(2)(இ) இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுநெறி 04 பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும் . |
| (இ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 91 ஆம் பிரிவு. | 2017 ஒக்டோபர் 25 ஆம் திகதிய அப/17/2287/703/085 ஆம் இலக்க அமைச்சரவையின் முடிவின் மூலம் நிதியத்தை வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்கு எந்த ஏற்பாடும் இல்லை என தீர்மானிக்கப்பட்டிருந்தமையினால், நிதியத்தின் வருமானம் தொடர்பாக வரி கடப்பாடு இருந்தாலும், அது சம்பந்தமாக, 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 91 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி செயலாற்றியிருக்கல்லை. | நிதியத்தை வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 91 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி செயலாற்றுதல் வேண்டும். |

### 1.6 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மிகைப் பணத்தை குறுங்கால முதலீடுகளுக்குப் பயன்படுத்த முடியும் என்றாலும், நிதியத்தின் தொழில்படு மூலதனத் தேவைகளுக்குப் போதுமான பண இருப்பு இருந்தபோது, ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்கு (07 நாட்கள்) முதலீடுகள் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதற்கு குறைந்தபட்ச வட்டி வருமானம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், அந்த முதலீடுகளை 01 மாதத்துக்குக் குறையாத காலப்பகுதியினுள் பயன்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை. | கட்டுமானத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, 07 நாட்கள் நிலையான வைப்புக்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை. முதலீடுகளை உச்ச பயனுள்ளதாக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | மிகைப் பணத்தை பயனுறுவாக முதலிடுவதற்கு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்ண்டிற்கான செயல்பாட்டு விளைவு ரூபா 40,365,301 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 17,189,698 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 23,175,603 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பகுதியளவு வீட்டு நலன் கொடுப்பனவு 66 சதவீதத்தால் அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 ஆம் ஆண்டில் மெத்செவன திட்டத்தின் கீழ் 174 இராணுவ பயனாளிகள் பொருட்டு ரூபா 174 மில்லியன் செலுத்தி முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அதில் 79 வீட்டுப் பயனாளிகளுக்கு மொத்தமாக ரூபா 27,228,619 ஆன இறுதித் தவணைப்பணமாக செலுத்துவதற்கு 2023 திசெம்பர் 31ஆம் திகதி வரையிலும் முடியாமற்போனது. | கட்டுமான பணி தாமதமானதால், மூன்றாவது தவணை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. கட்டுமானப் பணியை முடிப்பதற்கான குறிப்பிட்ட கால எல்லையுடன் உடன்படிக்கை செய்துகொள்வதற்கும், திட்டமிட்டபடி தவணைகளை செலுத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டில் திட்டமிடப்பட்ட உத்தேச இலக்குகளை எய்துவதற்கு செயலாற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 1985 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 09ஆம் பிரிவுக்கு இணங்க, கடமைகளை நிறைவேற்றும்போது காயமடைந்த அல்லது இறந்த ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் மற்றும் குடும்பங்களுக்கு நலன்கள் வழங்கப்படுவதைத் தவிர, சட்டத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப தேசிய பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் உறுதிசெய்தல் தொடர்பான பணிகளுக்கு மீளாய்வாண்டின் செயல் திட்டத்திலேனும் வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால வேலைத்திட்டங்களைத் திட்டமிடும்போது, தேசிய பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் தொடர்பான தகவல்களை நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கின்றேன். | நிதியச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை தயாரித்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின்படி, நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை என்பன பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான நிதியத்தின நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | தேசிய பாதுகாப்பு நிதியம் 2017 ஆம் ஆண்டு வரை நிதி அமைச்சின் கீழ் இருந்தமையினால், அந்த ஆண்டுக்குரிய அறிக்கையை சமர்ப்பித்த பின்னர், இந்த அமைச்சினால் பாராளுமன்றத்தில் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |